Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, APRIL 12, 2023

புதன்கிழமை ஏப்ரல் 12, 2023 | ஒளி: 08 கதிர் 249 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | free

# தள்ளிப்போகிறது சின்னத் தேர்தல்



உள்ளூராட்சி மன்ற தேர்தலை எதிர்வரும் 25ஆம் திகதி நடத்த முடியாது என்றும் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நிதி கிடைக்கும் பட்சத்தில் தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும் என்றும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்கவின் கையொப்பத்துடன், செவ்வாய்க்கிழமை (11) வெளியான அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

20க்கு கையுயர்த்தாமல் விட்டிருந்தால்

## பல பள்ளிவாசல்கள்மூடப்பட்டிருக்கும்



■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

“20ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு ஆதரவாக நான் கை உயர்த்தியது உங்களுக்கு பிழையான நடவடிக்கையாக தெரியலாம். அவ்வாறு கை உயர்த்தாமல் விட்டிருந்தால் பல பள்ளிவாசல்கள் மூடப்பட்டிருக்கும்” என்று அமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் தெரிவித்தார் காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் திங்கட்கிழமை (10) நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ச்சி P2



பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த

# உலகவங்கி தொடர்ந்து ஆதரவளிக்கும்

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக உலக வங்கி உறுதியளித்துள்ளது என்றும்சமூக பாதுகாப்பு கட்டமைப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்த உலக வங்கி இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொருளாதார ஸ்திரத்தன்மையை அமுல்படுத்துவது, சமூகப் பாதுகாப்பை அதிகரிப்பது மற்றும் வளர்ச்சியைப் புதுப்பித்தல் போன்றவற்றில் உலக வங்கியினால் இலங்கைக்கு ஆதரவளிக்க முடியும் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக உலக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் அன்னா பிஜேர்ட் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

கல்வியை நவீனப்படுத்தாத அவலம்

## மரணப் பொறியாக மாறியுள்ளது



இன்றைய காலகட்டத்துக்கு ஏற்றவாறு நாட்டின் கல்வியை நவீனப்படுத்தாத அவலத்தை ஒரு நாடாக நாம் இன்று அனுபவித்து வருகிறோம் என்றும் இது ஒரு வகையில் கல்வியின் மரணப் பொறியாக மாறியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

உறுப்பினர்களின் எண்ணிக்கையை

## அரைவாசியாக குறைக்கும் யோசனை கையளிப்பு

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை சுமார் 8 ஆயிரத்தில் இருந்து 4,714 ஆக குறைப்பதற்கான யோசனையை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக் குழுவின் தவிசாளருமான மஹிந்த தேசப்பிரிய, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் கையளித்தார்.


குறித்த அறிக்கை குழுவின் தலைவர் மஹிந்த தேஷப்பிரியவினால் பிரதமர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (11) காலை கையளிக்கப்பட்டதாக பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

தொடர்ச்சி P2

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய

## 75 பேருக்கு அபராதம் மூவருக்கு அழைப்பாணை

■ எம்.எஸ்.எம். ஹனீபா



அம்பாறை மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 75 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 03 இலட்சத்தி 55 ஆயிரத்தி 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், 03 வர்த்தகர்களுக்கு நீதி மன்றினால் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை,தெஹியத்தக்கண்டி,அக்கரைப்பற்று, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட 78 சுற்றிவளைப்புகளில், 75 வர்த்தகர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார செவ்வாயக்கிழமை (11) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## கனவில் வந்த விக்கிரங்களை குடும்பத்தலைவன் எடுத்தார்

■ ம் நிதர்ஷன் வினோத்

யாழ். மிருசுவில் மன்னன்குறிச்சியிலுள்ள வீட்டு வளவிலுள்ள நிலத்திலிருந்து 12 சிறிய விக்கிரகங்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. ஞாயிற்றுக்கிழமை (09) அதிகாலை இந்த விக்கிரகங்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. முத்தையா பாஸ்கரன் என்ற குடும்பத் தலைவர் தனது வீட்டு வளவில் விக்கிரகங்கள் இருப்பதாக கனவு கண்டுள்ளார்.

அதனையடுத்து அதிகாலை எழுந்து அவ்விடத்தை தோண்டிய போது பித்தளையிலான 12 சிறிய விக்கிரகங்களைக் கண்டுள்ளனர். சிவன், சிவலிங்கம், அம்மன், ஆறுதலை முருகன், சிவனும் பார்வதியும் இடப வாகனத்தில் அமர்ந்திருக்கும் விக்கிரகம், ஒற்றைத்தலை நாகம் ஐந்து விக்கிரங்கள், ஐந்து தலை நாகம் இரண்டு விக்கிரகங்களே மீட்கப்பட்டுள்ளன.

அதனையடுத்து அவ்விடத்தில் கொட்டில் அமைத்து விக்கிரகங்களை வைத்து வழிபட்டுவருகிறார்கள். சம்பவம் தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்ற

## புதிய எதிர்பார்ப்புக்கள் தோன்றியுள்ளன

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது என்று பலர் நினைத்தாலும் சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தம் வாயிலாக நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்ற புதிய எதிர்பார்ப்புக்கள் தோன்றியுள்ளன என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நுவரெலியா நகர அபிவிருத்தி தொடர்பில் நுவரெலியா மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் திங்கட்கிழமை (10) நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டிருந்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் பங்குபற்றலுடன் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் நுவரெலியா புதிய நகர அபிவிருத்தி திட்டம் மற்றும் நுவரெலியா சுற்றுலா திட்டம் என்பனவும் வெளியிடப்பட்டன.

தொடர்ச்சி P2

## தனியார் வகுப்புக்களை இடை நிறுத்தவும்

■ பாறுக் ஷிஹான்



கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நடவடிக்கைகளையும் தற்காலிகமாக இடைநிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி அறிவித்துள்ளார்.

இதற்கமைய கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிலையங்களிலும் தரம் 01 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் இம் மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 24 ம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

யாழில் திடீர் சோதனை

## 15 வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

■ எஸ் தில்லைநாதன்யா

ழ்ப்பாணத்தில் உள்ள பல வியாபார மையங்களிலில் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளை பயன்படுத்திய 15 வியாபாரிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் பின்னரே 15 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வியாபாரிகளினால் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளை பரிசோதித்த அதிகாரிகள் குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானித்தனர்.

தொடர்ச்சி P2

ஊழலை ஒழிப்பதற்கு ஒன்றிணையவும்

## அரசாங்கத்துக்கு அழைப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் தொழிநுட்ப உதவியுடன் முன்மொழியப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்பு சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கரிசனை செலுத்தி இலங்கையிலிருந்து ஊழலை ஒழிப்பதற்கும் நிலையான பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கும் நாட்டின் பிரஜைகள், துறைசார் வல்லுநர்கள் மற்றும் சிவில் சமூகத்துடன் இணைந்து செயல்பட ஒன்றிணையுமாறு ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

தீயிட்டு எரிக்கப்பட்ட நீதிமன்ற ஆவண காப்பகம்

## மூவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற ஆவண காப்பகத்தை தீயிட்டு எரித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மூவரின் விளக்கமறியலும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம். ஹம்ஸா செவ்வாய்க்கிழமை (11) வழங்கினார்.

2022 டிசெம்பர் மாதம் புதன்கிழமை (21) அதிகாலை வேளையில் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு வைக்கப்பட்ட தீயினால் நீதிமன்றின் வழக்கு பதிவேட்டு அறை மற்றும் திறந்த நீதிமன்றம் போன்ற பல பிரிவுகளிலுள்ள ஆவணங்கள் முற்றாக தீக்கிரையாகின.

இது தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமெரா பதிவுகளில் 3 நபர்கள் முகத்தை மூடியவாறு நீதிமன்ற வளாகத்தில் உள் நுழைந்து கட்டடத்துக்கு தீ வைத்து விட்டு தப்பியோடும் காட்சிகள் பதிவாகியிருந்தன.

தொடர்ச்சி P2

## மின்நிலையத்தை முழு திறனில் இயக்க முடியும்



நுரைச்சோலை லக் விஜய அனல்மின் நிலையத்தை முழுத் திறனில் இயக்குவதற்கு தேவையான நிலக்கரி இருப்பு தங்களிடம் இருப்பதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அமைச்சர் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், நிலக்கரி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சில தொழிற்சங்கங்கள் மற்றும் ஊடகங்களில் வெளியான செய்தியையும் அவர் நிராகரித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் உற்பத்தி முன்னறிவிப்புக்கு அமைய, இந்த பருவத்தில் மின் உற்பத்தி நிலையத்தை முழு கொள்ளளவில் இயக்குவதற்கு 30 நிலக்கரி கப்பல்கள் தேவை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

23ஆவது கப்பல் நிலக்கரியை இறக்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாக உறுதிப்படுத்திய அமைச்சர், மேலும் மூன்று நிலக்கரி கப்பல்கள் ஏற்கெனவே இலங்கையை வந்தடைந்துள்ளதாகவும் இறக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கும் என்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பல பள்ளிவாசல்கள்மூடப்பட்டிருக்கும்

கூட்டத்துக்கு தலைமை வகித்த அமைச்சர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

“வெளியில் இருந்து பார்ப்பதற்கு உங்களுக்கு பிழையான விடயங்களாக தெரிந்திருக்கலாம். உள்ளுக்கு என்ன நடந்த என்று எங்களுக்குத்தான் தெரியும். நாங்கள் 20க்கு கை உயர்த்தாமல் விட்டிருந்தால் பல பள்ளிவாசல்கள் மூடப்பட்டிருக்கும்.

பள்ளிவாயல்கள் வணக்கஸ்தளங்கள் தொடர்பிலான சட்டங்களும் வந்திருக்கும். 20வது திருத்த சட்ட மூலத்துக்கு நாங்கள் கை உயர்த்தி ஆதரவு கொடுத்து 151 வரவில்லை. 151 வந்ததன் பின்னர் தான் நாங்கள் கையை உயர்த்தினோம்.

“பிச்சை வானா நாயைப் பிடி” என்ற சீலம் தான் வந்திருக்கும். நாங்கள் ஆதரவு கொடுக்காமலேயே ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த 12 பாராளுமன்ற உறுப்பினர்கள் 20ஆவது திருத்த சட்டத்துக்கு ஆதரவு கொடுக்க இருந்தார்கள்.

151 என்ற அந்த ஆதரவையும் தாண்டியே அந்த 12 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு கொடுக்க தயராக இருந்தார்கள். எங்களது பெயர் எத்தனையாவதாக இருகிறது என்று பாராளுமன்ற ஹன்சாட்டை எடுத்துப் பார்த்தால் தெரியும்.

சிறுபிள்ளையொன்றை எரித்த சம்பவத்தையும் என்னுடைய புகைப்படத்தையும் போட்டு சமூக ஊடகமொன்றில் பதிவு செய்யப்பட்டிருந்ததாக அறிந்தேன்.

கொரோனா ஜனாசா எரிப்புக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. முதலாவது ஜனாசா எரிக்கப்பட்டது, 2020ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதியாகும். நான் எம்.பியாக வந்ததது. 2020ம் ஆண்டு ஒகஸ்ட் 8ஆம் திகதியாகும். ஜனாசா எரித்தமைக்கும் எனக்கும் எந்த தொடர்பும் கிடையாது.

பதிவு செய்யப்படாத பள்ளிவாசல்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள். இனியாவது நாங்கள அவதானமாக இருக்க வேண்டும். பள்ளிவாசலாக இருந்தாலும் இந்து கோவில்களாக இருந்தாலும் பதிவு செய்வதை பதிவு செய்து கொள்ள வேண்டும்” என்றார்.

## அரைவாசியாக குறைக்கும் யோசனை கையளிப்பு

குழுவுக்கு ஏப்ரல் இறுதி வரை நீட்டிக்கப்பட்ட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதால் மேலும் முன்மொழிவுகளைக் கொண்ட மற்றொரு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணயத்துக்கான தேசிய குழுவொன்றை நியமித்திருந்தார். 2022ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இந்த குழு நியமனம் குறித்து அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் குழுவின் தவிசாளராக முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டதுடன், வி. திஸாநாயக்க, எம்.எம்.ஆர். அதிகாரி, கே.தவலிங்கம், ஐ.ஏ.ஹமீட் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மின்நிலையத்தை முழு திறனில் இயக்க முடியும்

27 மற்றும் 29 வரையிலான நிலக்கரி தொகுதிகள் பரிந்துரைக்கப்பட்டு உள்ளதாகவும், அவை மே 1ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையை வந்தடையும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், 30ஆவது நிலக்கரி தொகுதி மே முதல் வாரத்தில் இது இலங்கையை வந்தடையும் என்றும் குறிப்பிட்ட அமைச்சர், அனல்மின் நிலையத்தை முழு கொள்ளளவுடன் இயக்குவதற்கு தேவையான நிலக்கரி இருப்பு தங்களிடம் இருப்பதாக குறிப்பிட்டார்.

## தனியார் வகுப்புக்களை இடை நிறுத்தவும்

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் ”முஸ்லிம்களின் புனித நோன்பு மற்றும் தமிழ் சிங்கள புதுவருடப்பிறப்பு போன்ற பல முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகைகளினைக் கொண்ட இம்மாதமானது அதிக உஷ்ணம் நிறைந்ததாக காணப்படுகின்ற போதிலும் கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் பொருத்தமற்ற நேரங்களில் வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இது மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பொதுமக்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் பல்வேறு சிரமங்களை ஏற்படுத்துவதாக மத அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன. இம்முறைப்பாடுகளுக்கு அமைவாகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ” என அவர் தெரிவித்துள்ளார்.

## மூவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

இச்சம்பவம் தொடர்பாக விசாரணையை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் சந்தேகத்தின் பேரில் அக்கரைப்பற்று கோளாவில் பிரதேசத்தை சேர்ந்த 28,24 மற்றும் 19 வயதுடைய 03 சந்தேக நபர்கள் கல்முனை பெரியநீலாவனை பிரதேசத்தில் மறைந்திருந்த வேளையில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த வழக்கு செவ்வாய்க்கிழமை (11) மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா சந்தேக நபர்களை மீண்டும் எதிர்வரும் 25ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# உலகவங்கி தொடர்ந்து ஆதரவளிக்கும்

அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் கடந்த 10 ஆம் திகதி முதல் இடம்பெற்றுவரும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வசந்த கால கூட்டத் தொடரில் கலந்து கொண்ட இலங்கை பிரதிநிதிகளை சந்தித்த பின்னரே அவர் தனது டுவிட்டர் பதிவில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க மற்றும் திறைசேரியின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தன ஆகியோரை நல்ல முறையில் சந்தித்ததாக தனது டுவிட்டர் பதிவில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பொருளாதார மீட்சிக்கு நமது சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் எவ்வாறு துணைபுரியும் என்பது குறித்து உலக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் அன்னா பிஜேர்டுடன் கலந்துரையாடியதாக இராஜாங்க அமைச்சரும் தெரிவித்துள்ளார்.

சமூக பாதுகாப்பு கட்டமைப்பு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்த வலுப்படுத்த உலக வங்கி இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனையும் இராஜாங்க அமைச்சர் மற்றும் அவரது குழுவினர் சந்தித்தாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பு குறித்து கலந்துரையாடியதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

## மரணப் பொறியாக மாறியுள்ளது

ஹொரவப்பொத்தானை வீரச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு ஸ்மார்ட் வகுப்பறைக்கான உபகரணங்களை நன்கொடையாக வழங்கும் பிரபஞ்சம் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (11) இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

நாட்டின் கல்வியை புதுப்பிப்பிப்பதற்கும் நவீனத்துவ சூழலுக்கு ஏற்றவாறு மேம்படுத்தும் திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி வகுத்துள்ளதாக தெரிவித்த அவர், உலகின் மிக நவீன மற்றும் மேம்பட்ட கல்விமுறைகளுடன் இதனை ஒப்பிட்டுப்பார்க்கலாம் என்றார்.

இந்நாட்டிலுள்ள 10 ஆயிரத்துக்கும் அதிகமான பாடசாலைகளை ஸ்மார்ட் பாடசாலைகளாக மாற்றுவதே தமது ஒரேநோக்கமாகும் என்றும் இதற்காக மேற்கொள்ள முடியுமான சகலநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

எமது நாட்டில் பல பாகுபாடுகள் காணப்படுவதாகவும் மதங்கள், இனங்கள், பணக்காரர்கள், ஏழைகள், இயலுமையுள்ளவர்கள், இயலுமையற்றவர்கள் என பல்வேறு வகைகளில் பிரிந்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

## புதிய எதிர்பார்ப்புக்கள் தோன்றியுள்ளன

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, நுவரெலியா மாவட்டத்தை நோக்கி வரும் சுற்றுலாப் பிரயாணிகளை இலக்கு வைத்து வருடம் முழுவதும் சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை அதிகரித்துக் கொள்ளுவதற்கான கண்கவர் நகரமாக அதனை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் நோக்கத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

சுற்றுலாத்துறையின் தேவைப்பாடுகளை அறிந்துகொண்டு புதிய திட்டங்களை வகுக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, உயர் கட்டிடங்களுக்கு மாறாக ஓய்வெடுக்கக்கூடிய வகையிலான ரம்மியமான சூழலுடல் அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நுவரெலியா நகரத்திற்குள் மழைநீர் வழிந்தோடுவதற்கு அவசியமான வேலைத்திட்டம் ஒன்று இல்லாமை நீண்டகால பிரச்சினையாக உள்ளதெனவும் அதற்கு தீர்வு காண்பதற்கான வேலைத்திட்டத்தை விரைந்து நடைமுறைப்படுத்துமாறும் வலியுறுத்திய ஜனாதிபதி, குடிநீர் பிரச்சினைக்கான தீர்வுகளை வழங்குவதற்கான முக்கியமான சில அறிவுரைகளையும் வழங்கினார்.

நுவரெலியா நகரத்திற்கு முறையற்ற விதத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு மாறாக உரிய திட்டமிடலுக்கமைய நிர்மாணிப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஜனா திபதி எடுத்துரைத்தார்.

பாரிய கட்டிடங்களை நிர்மாணிப்பதால் நகரம் சீரழிவுக்கு உள்ளாவதாகவும் நுவரெலியாவாகவே தொடர்ந்தும் தக்கவைப்பதா அல்லது நியுயோர்க் நகரமாக மாற்றியமைப்பதாக என்பதை தீர்மானிக்குமாறும் அறிவுறுத்தினார்.

மத்திய அதிவேக வீதியின் நிர்மாண பணிகள் நிறைவு கண்டவுடன் நுவரெலியாவிற்கு வருகைத்தரும் சுற்றுலாப் பிரயாணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவர்களுக்கு அவசியமான வசதிகளை மேம்படுத்துவதற்கான உரிய திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அதேபோல் இந்த விடயத்தில் அரசியல் பிரமுகர்களும் அரசாங்க அதிகாரிகளும் நன்கு புரிதலுடன் ஒருங்கிணைந்து செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்திய ஜனாதிபதி புதிதாக சிந்தனைகளுன் நாட்டிற்கு அவசியமான புதிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் பின்னர் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், அதிகார சபை மற்றும் ஆணைக்குழுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களை சந்திக்க தாம் எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டு இலக்கு வைத்துள்ள அபிவிருத்தித் திட்டத்தில் வெற்றியீட்டுவதற்கு அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பையும் பெறுவதே தமது எதிர்பார்ப்பாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

நிலையான மற்றும் கவர்ச்சியா அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக நுவரெலியா மாவட்டத்தை சுற்றாடலுக்கு உகந்த மாவட்டமாக அபிவிருத்தி செய்வது தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நுவரெலியா நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நகரத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நானுஓயாவை உப நகரமாக அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நுவரெலியாவில் பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பது மற்றும் இராமாயண மையம் ஒன்றை அமைப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நானுஓயா புகையிரத நிலையத்தை நவீனமயப்படுத்தி அதற்கு அருகில் உயர்தர பொருளாதார நிலையமொன்றை ஸ்தாபிக்குமாறு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, இதன் மூலம் விவசாயிகள் மரக்கறிகளை பொதி செய்து பாதுகாப்பாக கொழும்புக்கு கொண்டு செல்ல முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

## தள்ளிப்போகிறது சின்னத் தேர்தல்

நிதிப்பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தேர்தலை ஒத்திவைக்க தீர்மானித்துள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான புதிய திகதி, தேவையான நிதி கிடைத்தவுடன் அல்லது தேர்தலை நடத்துவது தொடர்பான வழக்கில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியவுடன் தீர்மானிக்கப்படும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஏதேனும் மூன்று விடயதானங்களில் ஒன்றின் அடிப்படையில் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கலந்தாலோசித்து தேர்தலை நடத்த தேவையான நடவடிக்கைகளை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் மேற்கொள்வார்கள் என்றும் ஆணைக்குழு தெரிவித்தது.

## 75 பேருக்கு அபராதம் மூவருக்கு அழைப்பாணை

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் ஆலோசனைக்கமைய அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

வர்த்தகர்களுக்கு எதிராக, அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

காலவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற குற்றசாட்டுகளின் கீழும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும் கூறினார்.

பொருட்களை கூடுதலான விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக பொது மக்கள் 1977ஆம் இலக்கத்திற்கு அல்லது மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் 0632222355 எனும் இலக்க தொலைபேசி இலக்கத்திற்கு தகவல்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 15 வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

இனிவரும் காலங்களில் நிறுவை அல்லது அளவை, நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களை வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தும் வியாபார நிலையங்களிலும் திடீர் பரிசோதனை மேற் மேற்கொள்ளப்படும் என்று திணைக்களம் அறிவித்துள்ளது.

## அரசாங்கத்துக்கு அழைப்பு

குறித்த நிறுவனத்தால் செவ்வாயக்கிழமை (11) வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

இந்த முன்மொழியப்பட்டுள்ள சட்டத்தில் முக்கிய இரண்டு விடயங்கள் தொடர்பில் கரிசனை கொள்வதாகவும் இச்சட்டமானது தகவல் அறியும் உரிமைச் சட்டம் உட்பட மற்ற அனைத்து எழுதப்பட்ட சட்டங்களையும் மீற முற்படுகிறது என்றும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

முன்மொழியப்பட்ட சட்டத்தில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகள் இரகசிய பாதுகாப்பு/காப்பு பிரமாணத்தில் கையெழுத்திட வேண்டிய பிரிவுகள் காணப்படுகின்றன.

ஆகவே, புதிய சட்டத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் தகவல்களை வெளியிடுவது ஆணைக்குழுவின் சிறப்பு அனுமதியுடன் மாத்திரமே சாத்தியமாகும்.

எனவே, இம்முன்மொழியப்பட்ட சட்ட ஏற்பாட்டின் அடிப்படையில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடமிருந்து தகவல்களை அணுகுவதை மிகவும் கடினமாக்குவதன் மூலம் இரகசிய கலாச்சாரம் ஊக்குவிக்கப்படுகிறது. மேலும் மசோதாவில் கூறப்பட்டுள்ள “ஆட்சியில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தல்” எனும் நோக்கமும் மறுக்கப்படுகிறது.

ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனம் கரிசனை கொள்ளும் இரண்டாவது விடயமானது, தவறான குற்றச்சாட்டுகளை குறிக்கும் இந்த மசோதாவின் பிரிவு 119 ஆனது, ஊழல் தொடர்பில் தகவல் வழங்க விரும்பும் பொதுமக்களுக்கும் முறைக்கேடுகளை வெளிப்படுத்தும் நபர்களுக்கும் எதிர்மறையான சமிக்ஞையை தோற்றுவிக்க கூடும் என நிறுவனம் குறிப்பிடுகிறது.

தற்போதைய சட்டத்திலும் காணப்படுகின்ற அதே சட்ட ஏற்பாடானது ஊழலுக்கு எதிராக செயற்படும் நபர்களை குறிவைத்து தவறாக பயன்படுத்தப்படவில்லை.


என்றாலும், அரசியல் ரீதியாக செல்வாக்கு செலுத்தும் பொதுச் சேவையின் பின்னணியில் அல்லது ஜனநாயகம் வலுவிழந்த நிலை அல்லது பலவீனமான ஆட்சிமுறைமை அல்லது ஊழல் மிக்கவர்களின் ஆட்சி போன்ற பாதகமான சூழ்நிலையில் இந்த சட்ட ஏற்பாடானது தீவிர எதிர்விளைவு மற்றும் ஆபத்துக்கூடியாதாக மாறும்.

பிரஜைகளின் கருத்துச் சுதந்திரத்திற்காக தமது செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஓர் அமைப்பு என்றடிப்படையில் இந்த முன்மொழியப்பட்ட மசோதாவானது மிகவும் வலுவானதாக அமைய வேண்டும் என்று ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் கருதுகிறது.

அதேவேளை, ஊழல் தொடர்பில் தகவல் வழங்க விரும்பும் பொதுமக்களுக்கும் முறைக்கேடுகளை வெளிப்படுத்தும் நபர்களுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தாது ஊழல் தொடர்பில் முறையிட ஊக்குவிக்க வேண்டும் என்று கருதுவதாக நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# சோபகிருது என்றால் மங்கலம்

## அறிவியல் சார்ந்த தமிழர் புத்தாண்டு





விபுலமாமணி தேசமான்ய
வி.ரி.சகாதேவராஜா



மற்றும் ஒரு புதிய வருடம் "சோபகிருது" என்ற பெயரில் இன்று உதயமாகிறது. தமிழரின் 60 வருட சுற்றுவட்டத்தில் 37 வது வருடம் இது.."சோபகிருது" என்றால் தமிழில் "மங்கலம்" என்று பொருள். அத்தகைய மங்கலமான புதிய வருடத்தை மங்கலமாக வரவேற்க வேண்டும்.

தமிழர்கள் ஏன் சித்திரை 1ஐ புத்தாண்டாக கொண்டாடினார்கள்? என்பதை அறிவீர்களா? அதற்கு அறிவியல் சார்ந்த விளக்கம் உள்ளதையும் அறிவீர்களா?

சூரியன் மிகத் துல்லியமாக கிழக்கில் உதிக்கும் நாள் தான் சித்திரை 1. எனவேதான்

தமிழர்கள் சித்திரை 1ஐ புத்தாண்டாக கொண்டாடினர் .

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் துல்லியமாகக் கணித்துக் கூறிய வானியல் சாஸ்திரம்

இந்துசமயம் சொல்லி வைத்த நமக்குத் தெரியாத உண்மைகள் எனலாம் இந்த நவீன விஞ்ஞானம் கண்டுபிடிப்பு ஆராய்ச்சிகள் எல்லாம் வரமுன்பே பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழன் சந்திர சூரிய கிரகணங்களைக் கணித்து பஞ்சாங்கத்தில் பொறித்திருந்தான். அதுமட்டுமின்றி சந்திர சூரிய நகர்வுகள் நல்லது கெட்டது நாள் கோள் பலன் அனைத்தும் அன்றே கணிக்கப்பட்டன. அத்தகைய அறிவுபூர்வமான சமுதாயமாக தமிழர் சமுதாயம் அன்றே விளங்கியிருந்தது.

பொதுவாக சித்திரை 1 ஆடி 1ஐப்பசி 1 தை 1 இவற்றை எல்லாம் விழாவாக நாம் கொண்டாடுறது ஏதோ ஒரு சடங்கு / பழக்கம் என எண்ணியிருக்கின்றோம். அப்படியல்ல.

நம் முன்னோர்கள் இதுக்கு பின்புலமாக மிகப்பெரிய அறிவியலை வைத்திருந்தார்கள் என்பது தெரியுமா?

"சூரியன் உதிக்கும் திசை கிழக்கு"என்று சிறு பிள்ளைகளுக்கும் தெரியும்..

என்றாவது ஒரு அளவை வைத்து சூரியன் உதிக்கின்ற போது சோதித்து இருக்கிறோமா? என்றால் கண்டிப்பாக இல்லை...என்று தான் சொல்ல வேண்டும்.

வெள்ளையர்கள் நம் அறிவியலை அழித்துவிட்டு, ஒரு முட்டாள் தனமான கல்வியை புகுத்தி விட்டான் என்பதற்கு இதுவும் ஒரு சான்று..

ஆம் சூரியன் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டுமே சரியாக கிழக்கே உதிக்கும்..!!

பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக வடகிழக்கு நோக்கி நகர்ந்து, ஒரு குறிப்பிட்ட புள்ளியில் மறுபடியும் தெற்கு நோக்கி திரும்பும்.

அதன் பின் மறுபடியும் ஒரு நாள் கிழக்கே உதிக்கும், பின்னர் தென்கிழக்கு நோக்கி நகரும்.

இப்படி சரியாக கிழக்கில் ஆரம்பித்து, வடகிழக்கு, தென்கிழக்கு என்று போயிட்டு மறுபடியும் கிழக்குக்கு வர ஆகிற நேரம் சரியாக ஒரு வருடம்.

சரி.. இதுக்கும் தமிழ் மாதத்திற்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்கலாம்.

சூரியன் தன் பயணத்தை கிழக்கில் ஆரம்பிக்கும் நாள் தான் "சித்திரை 1". தமிழ் புத்தாண்டு. (*In science it is called Equinox*)

அதன் பின்னர் சரியாக வடகிழக்கு புள்ளி தான் "ஆடி 1".ஆடி பிறப்பு.(*solstice*)

மறுபடியும் கிழக்குக்கு வரும்போது "ஐப்பசி 1". தீபாவளி.(*equinox*)

மீண்டும் சரியாக தென்கிழக்கு - இப்போது "தை1". பொங்கல். (*solistice*)

இந்த வானியல் மாற்றங்களையும், அதனை சார்ந்த பருவ கால மாற்றங்களையும் நன்கு உணர்ந்து இருந்த நம் முன்னோர்கள், இவற்றை அனைவரும் அறியும் வகையில் தான் திருவிழாக்களாக கொண்டாடினார்கள்.

சித்திரை (*vernal equinox*) - புத்தாண்டு.

ஆடி 18 (*summer solstice*) - ஆடிப்பிறப்பு.

ஐப்பசிஅமாவாசை(*autumn equinox*)- தீபாவளி.

தை 1(*iwter solstice*) - பொங்கல்.

அப்படிப்பட்ட ஒரு புத்தாண்டு பிறப்பை இன்று கொண்டாடுகின்றோம். அதுவும் 60 வருட சுழற்சியில் 37 வது வருடமான மங்கலம் என்னும் சுபோகிருது புதிய வருடத்தை வரவேற்கிறோம்.

இத்தகைய அறிவியல் சார்ந்த விடயத்தை நமது அடுத்த தலைமுறைக்கு நமது பாரம்பரியத்தை வெறும் சடங்காக மட்டும் அல்லாமல் அதில் மறைந்துள்ள அறிவியலையும் கொண்டு சேர்க்க வேண்டும்.

கடந்துவந்த கடினமான 2022 ஆம் ஆண்டிலே நடந்த நல்லதையும் தீயதையும் எண்ணிப்பார்த்து நமது குறைநிறைகளை நிவர்த்தி செய்து, மலர்ந்துள்ள புதிய ஆண்டை வரவேற்பதோடு, கடந்த ஆண்டு முழுவதும் நமக்கு உதவிய கடவுளுக்கும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் கூறிக்கொண்டு, மலர்ந்துள்ள இந்த ஆண்டு புதிய எண்ணங்கள், புதிய முயற்சிகள் நல்ல சிந்தனைகள் என்பனவற்றால் ஒரு உயிரூட்டமுள்ள விசேட ஆண்டாக நமது நாட்டு மக்கள் அனைவருக்கும் அமைந்திடவும், இலங்கை முழுவதும் பிரகாசமான சந்தோசம் நிறைந்த சுபீட்ஷமான வாழ்வு மக்களுக்கு கிடைத்திடவும், எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து... நம்மால் முடிந்தவரை எல்லோரையும் நேசித்து இன, மத, சாதி பேதமின்றி எல்லோருக்கும் உதவி செய்வோம் வாழும் காலம் முழுவதும் எல்லா மக்களையும் நேசிப்போம்...

தமிழ் வருடங்கள்!

சுபோகிருது என்றால் மங்கலம் என்று பொருள். அத்தகைய சிறப்பு பெயருடைய புது வருடத்தை வரவேற்பதில் மகிழ்ச்சி அளிக்கிறது.

தமிழன் அன்று வகுத்த 60 தமிழ் வருடங்களின் பெயர்களும் அவற்றின் சமஸ்கிருதம் மற்றும் தமிழ்ப்பெயர்களும் இங்கு தரப்பட்டுள்ளன.

01. பிரபவ - நற்றோன்றல்
*Prabhava*1987-1988
02. விபவ - உயர்தோன்றல்
*Vibhava* 1988-1989
03. சுக்ல - வெள்ளொளி
*Sukla* 1989-1990
04. பிரமோதூத - பேருவகை
*Pramodoota* 1990-1991
05. பிரசோற்பத்தி - மக்கட்செல்வம்
*Prachorpaththi* 1991-1992
06. ஆங்கீரச - அயல்முனி
*Aangirasa* 1992-1993
07. ஸ்ரீமுக - திருமுகம்
*Srimukha* 1993-1994
08. பவ - தோற்றம்
*Bhava* 1994-1995
09. யுவ - இளமை
*Yuva* 1995-1996
10. தாது - மாழை
*Dhaatu* 1996-1997
11. ஈஸ்வர - ஈச்சுரம்
*Eesvara* 1997-1998
12. வெகுதானிய - கூலவளம்
*Bahudhanya* 1998-1999
13. பிரமாதி - முன்மை
*Pramathi* 1999-2000
14. விக்கிரம - நேர்நிரல்
*Vikrama* 2000-2001
15. விஷு - விளைபயன்
*Vishu* 2001-2002
16. சித்திரபானு - ஓவியக்கதிர்
*Chitrabaanu* 2002-2003
17. சுபானு - நற்கதிர்
*Subhaanu* 2003-2004
18. தாரண - தாங்கெழில்
*Dhaarana* 2004-2005
19. பார்த்திப - நிலவரையன்
*Paarthiba* 2005-2006
20. விய - விரிமாண்பு
*Viya* 2006-2007
21. சர்வசித்து - முற்றறிவு முழுவெற்றி
*Sarvajith* 2007-2008
22. சர்வதாரி - முழுநிறைவு
*Sarvadhari* 2008-2009
23. விரோதி - தீர்பகை
*Virodhi* 2009- 2010
24. விக்ருதி - வளமாற்றம்
*Vikruthi* 2010-2011
25. கர - செய்நேர்த்தி
*Kara* 2011-2012
26. நந்தன - நற்குழவி
*Nandhana* 2012-2013
27. விஜய - உயர்வாகை
*Vijaya* 2013-2014
28. ஜய - வாகை
*Jaya* 2014-2015
29. மன்மத - காதன்மை
*Manmatha* 2015-2016
30. துன்முகி - வெம்முகம்
*Dhunmuki* 2016-2017
31. ஹேவிளம்பி - "பொற்றடை
*Hevilambi* 2017-2018
32. விளம்பி - அட்டி
*Vilambi* 2018-2019
33. விகாரி - எழில்மாறல்
*Vikari* 2019-2020
34. சார்வரி - வீறியெழல்
*Sarvari* 2020-2021*
35. பிலவ - கீழறை
*Plava* 2021-2022
36. சுபகிருது - நற்செய்கை
*Subakrith* 2022-2023
இவ்வருடம்
தமிழ் புத்தாண்டு
37. சோபகிருது - மங்கலம்
*Sobakrith* 2023-2024
38. குரோதி - பகைக்கேடு
*Krodhi* 2024-2025
39. விசுவாசுவ - உலகநிறைவு
*Visuvaasuva* 2025-2026
40. பரபாவ - அருட்டோற்றம்
*Parabhaava* 2026-2027
41. பிலவங்க - நச்சுப்புழை
*Plavanga* 2027-2028
42. கீலக - பிணைவிரகு
*Keelaka* 2028-2029
43. சௌமிய - அழகு
*Saumya* 2029-2030
44. சாதாரண - பொதுநிலை
*Sadharana* 2030- 2031
45. விரோதகிருது - இகல்வீறு
*Virodhikrithu* 2031-2032
46. பரிதாபி கழிவிரக்கம்
*Paridhaabi* 2032-2033
47. பிரமாதீச - நற்றலைமை
*Pramaadhisa* 2033-2034
48. ஆனந்த - பெருமகிழ்ச்சி
*Aanandha* 2034-2035
49. ராட்சச - பெருமறம்
*Rakshasa* 2035-2036
50. நள - தாமரை
*Nala* 2036-2037
51. பிங்கள - பொன்மை
*Pingala* 2037- 2038
52. காளயுக்தி - கருமைவீச்சு
*Kalayukthi* 2038-2039
53. சித்தார்த்தி - முன்னியமுடிதல்
*Siddharthi* 2039-2040
54. ரௌத்திரி - அழலி
*Raudhri* 2040-2041
55. துன்மதி - கொடுமதி
*Dunmathi* 2041-2042
56. துந்துபி - பேரிகை
*Dhundubhi* 2042- 2043
57. ருத்ரோத்காரி - ஒடுங்கி
*Rudhrodhgaari* 2043- 2044
58. ரக்தாட்சி - செம்மை
*Raktakshi* 2044- 2045
59. குரோதன - எதிரேற்றம்
*Krodhana* 2045- 2046
60. அட்சய - வளங்கலன்
*Akshaya* 2046-2047

இனி எந்த தங்குத்தடையும் இன்றி, 60 தமிழ் வருடங்களை சுயத்தை இழக்காமல் தமிழ்ப்பெயரோடு தமிழ் புத்தாண்டை வாழ்த்துவோம்...!

அனைவருக்கும் தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள் !



# சோபகிருது வருடம்

கலாநிதி சிவ
ஸ்ரீ ராமச்சந்திர
குருக்கள் பாபு சர்மா,
ஸ்ரீ வித்யா ஜோதிட
நிலையம்



வாக்கிய பஞ்சாங்கத்தின் படி புது வருடம் பிறக்கும் நேரம்: சித்திரை முதலாம் நாள் 14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.03 இல் புது வருடம் பிறக்கின்றது.

திருக்கணித பஞ்சாங்க கணிப்பின்படி சித்திரை மாதம் முதலாம் நாள் 14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02 .59இல் சோபகிருது வருடம் பிறக்கின்றது.

### வாக்கிய பஞ்சாங்கத்தின் படி விஷு புண்ணிய காலம் :

வாக்கிய பஞ்சாங்க கணிப்பின்படி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.03 இல் இருந்து பிற்பகல் 06.03 வரையிலான காலம் விஷு புண்ணிய காலம் ஆகும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின் படி விஷு புண்ணிய காலம் : திருக்கணித பஞ்சாங்கத்தின் படி கணிப்பின் படி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.59 இல் இருந்து மாலை 06.59 வரையிலான காலம் விஷு புண்ணிய காலம் ஆகும்.

விஷு புண்ணிய காலத்தில் மருத்துநீர் ,பஞ்சாங்கங்களில் குறிப்பிட்ட நேர இடைவெளிக்கு அமைய , வாக்கியத்தின் படி சிரசில் கொன்றை இலையும், காலில் புன்கிலையும் வைத்து ஸ்தானம் செய்க.

### புத்தாடை

வாக்கியத்தின் படி வெள்ளை நிறம் உள்ள பட்டாடை ஆயினும் வெள்ளை கரை அமைந்த புதிய பட்டாடை ஆயினும் அணிய வேண்டும்.

திருக்கணிதத்தின் படி வெண்ணிற பட்டாடை ஆயினும் அல்லது மஞ்சள் கரை கொண்ட வெண்ணிற ஆடை அணிவது நல்லது.

### புது வருட ஆபரணம்

வாக்கிய பஞ்சாங்கத்தின் படி முத்து வைரம் இழைத்த ஆபரணம், திருக் கணித பஞ்சாங்கத்தின் படி வைரம் பதிக்கப்பட்ட ஆபரணம்.

### தோஷம் உள்ள நட்சத்திரங்கள்

ரோகிணி , மிருகசீரிடம் 3ம், 4ம், பாதம், திருவாதிரை ,புனர்பூசம் 1 ம், 2ம், 3ம், பாதம் அத்தம் ,உத்தராடம் 2ம், 3ம், 4ம் பாதம் ,திருவோணம் , அவிட்டம் 1ம் , 2ம் பாதம்

### கைவிசேடம்

வாக்கிய பஞ்சாங்கத்தின் படி சித்திரை 2 ( 15. 04. 2023) சனிக்கிழமை காலை 07 .52 முதல் 09.00 மணி வரை .

சித்திரை 3(16.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 07. 49 முதல் 9 .48 வரை

திருக்கணித பஞ்சாங்கத்தின் படி சித்திரை 2 (15 .04. 2023 ) சனிக்கிழமை





காலை 06 .45 முதல் 07 .30 வரை.

சித்திரை 2 (15 .4 .2023 ) காலை 08 .00 மணியில் இருந்து 8.55 வரை

சித்திரை 3 ( 16 .04. 2023 ) ஞாயிறு காலை 08 .00 மணி முதல் 09.30 வரை.

சித்திரை 3 ( 16. 04 .2023 ) ஞாயிறு பகல் 12. 10 முதல் 1. 15 வரை.

### புது வருட வழிபாடு

சுகந்த சந்தனம் பூசி நறு மலர் சூடி சூரிய பொங்கல், பூஜைகள் செய்து விநாயகர், குலதெய்வ வழிபாடு செய்து குரு,பெற்றோர் மற்றும் பெரியோரை வணங்கி அறுசுவை உணவுடன் கடுகு, எள், புளி, நெல்லிக்கனி சேர்த்து அருந்தி ,தாம்பூலம் தரித்து கண்ணாடி, தீபம், நிறைகுடம் , திருமுறை புத்தகங்கள் ,தாமரை, பழ வகைகள், மஞ்சள் , குங்குமம் ,சந்தனம், வெற்றிலை, பாக்கு ஆகிய மங்கள பொருட்களை தரிசித்து புதிய வருட பலன்களை வாசிப்பதும் கேட்பதும் மங்கலமாகும்.

### மருத்து நீர்

தாழம் பூ , தாமரைப் பூ, மாதுளம் பூ, துளசி,விஷ்ணு கிராந்தி, சீதேவியர் செங்கல நீர் ,வில்வம் ,அருகு, பீர்க்கு, பால் ,கோசலம் ,கோமயம் , கோரோசனை ,மஞ்சள் ,மிளகு ,திப்பிலி ,

சுக்கு இவற்றினை சுத்தமான நீரிலிட்டு காய்ச்சிக்கொள்க.

### புதுக்கணக்கு

வாக்கியத்தின்படி சித்திரை 28 (11.05. 2023 ) வியாழக்கிழமை பகல் 10. 24 முதல் நண்பகல் 12. 27 வரை


திருக்கணிதத்தின் படி சித்திரை 13 ( 26 .04.2023) புதன்கிழமை காலை 07. 32 முதல் 09.05 வரை

சித்திரை 20 (03 .05. 2023) புதன் காலை 07.30 முதல் 08.40 வரை

சித்திரை 22 (05.05.2023) வெள்ளிக்கிழமை காலை 07.15 முதல் 08. 28 வரை







## 19 வருடகால

# இழுத்தடிப்புக்கு முற்றுப்புள்ளி

பாறுக் ஷிஹான்

2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மருதமுன மக்களுக்காக கட்டப்பட்ட 'மேட்டு வட்டை 65 ஆ' வீட்டுத்திட்டம் பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்திருந்தது.

குறித்த வீட்டுத் திட்டத்திற்குரிய பயனாளிகள் தெரிவு செய்யப்படுவதில் தொடர்ந்தும் ஏற்பட்ட இழுபறி நிலை காரணமாகவே இந்த வீடுகள் வழங்கப்படாமல் இருந்து வந்தது.

பல அரசியல் பிரமுகர்களும், அதிகாரிகளும் இந்த வீட்டுத் திட்டத்தை பார்வையிட்டு அதனை விரைவில் வழங்குவோம் என்று வாக்குறுதிகளை வழங்கிய போதிலும் இன்றுவரை அவர்களால் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனது.

வீடுகள் உரிய மக்களுக்கு வழங்கப்படாமல் இருந்ததனால் அந்த வீடுகள் சேதமடைந்தும், உடைந்து களவாடப்பட்டும் மிகவும் பழுதடைந்த நிலையிலேயே காணப்பட்டது. இந்நிலையில் கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக, ஜனாதிபதியினால் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் நியமிக்கப்பட்டிருந்தார்.

அந்த வகையில் கல்முனை பிரதேச அபிவிருத்திக் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றபோது மருதமுனையை சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் மருதமுனை மேட்டுவட்டை 65 மீற்றர் வீட்டுத் திட்டம் தொடரில் கேள்வி எழுப்பியதுடன் எப்போது இந்த வீடுகள் மக்களுக்கு கையளிக்கப்படும் என்ற கேள்வியையும் கேட்டிருந்தார்.

இதற்கு எஸ்.எம்.எம்.முஷாரப் விளக்கம் அளிக்கும்போது "இந்த வீட்டுத் திட்டம் இதுவரை மக்களுக்கு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவது





கவலைக்குரிய விடயம். இனியும் இதனை இழுத்தடிக்காமல் உரிய பயனாளிகளை தேர்வு செய்து அந்த வீடுகளை வழங்க நடவடிக்கை எடுப்பேன்" என்று உறுயளித்தார்.

மேலும்"எதிர்வரும் சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் இந்த வீட்டுத் தொகுதி மக்களிடம் கையளிக்கப்படும். இதற்காக கல்முனை பிரதேச செயலாளர் உரிய நடவடிக்கைகளை எடுத்து உரிய பயனாளிகளை தெரிவு செய்யும் பட்டியலை பூரணப்படுத்துமாறு" கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக குறித்த வீட்டு திட்டத்தை மக்களுக்கு கையளிப்பதற்காக மருதமுனைக்கு அண்மையில் விஜயம் செய்த எஸ்.எம்.எம்.முஷாரப், அந்த வீட்டுத் திட்டத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன் மாவட்ட அரசாங்க அதிபருடனும் தொலைபேசியில் தொடர்பு நிலைமைகளை விளக்கினார்.

இதற்கமைவாக ஏப்ரல் பத்தாம் திகதி இந்த வீடுகளை கையளிப்பதற்கான செயற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரபுடன் இணைந்து கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

அந்த வகையில் இந்த வீட்டுத் திட்டத்தின் ஒரு தொகுதி வீடுகள் இன்று மக்களிடம் கையளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் விடுகளையும் வழங்கி வைத்தார்.

# மதப்பிரிவினரை வெளியேற்றவும்

நிதர்ஷன் வினோத்

அரசுக்குச் சொந்தமான அச்சுவேலி நெசவு சாலையை அத்துமீறி கைப்பற்றி அடாவடித்தனம் புரியும் மதப்பிரிவினரை வெளியேற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அச்சுவேலி நெசவு சாலை முன்றலில் செவ்வாய்க்கிழமை (11) காலை 8 மணியளவில் சிவசேனை அமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நெசவு சாலை யுத்தத்துக்குப் பின்னர் இயங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர் குறித்த கட்டிடத்தில் ஒரு மதஸ்தலம் ஒன்று அமைக்கப்பட்டு பிரார்த்தனை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

குறித்த மத ஸ்தலத்தினால் சுற்றுசூழலில் அதிகளவு சத்தத்துடன் பிரார்த்தனை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இதன் காரணமாக மாணவர்கள் மற்றும் நோயாளிகள் பல்வேறு உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கு உள்ளாகுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இம் மதஸ்தலத்துக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்கொன்றும் தாக்கல்




செய்யப்பட்டு இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் குறித்த மதப்பிரிவின் போதகர் உட்பட மூவர் கடந்த வெள்ளிக்கிழமை வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த பெண்களைத் தாக்கி அச்சுறுத்தியமை தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அது தொடர்பான செய்தியை வெளியிட்டமைக்காக போதகரும் குழுவினரும் ஊடக நிறுவனமொன்றின் அலுவலகத்துக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், போதகர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போது குறித்த மதஸ்தலம் அமைந்துள்ள நெசவுசாலையினை மீளவும் கைத்தொழில் அமைச்சு பொறுப்பெடுத்து நடத்தவேண்டும் என்றும், சுற்றுச்சூழலில் இடம்பெறும் ஒலி மாசடைதலை கட்டுப்படுத்துவதற்காவும் அமைந்துள்ள மதஸ்தலம் அகற்றப்படவேண்டும் கோரி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

அடாவடி செய்யும் மதப்பிரிவே வெளியேறு, ஊடகங்களை அச்சுறுத்தாதே, இளைஞர்களின் தொழில் வாய்ப்பை பறிக்காதே, பொதுமக்கள் சொத்தில் மதம் வளர்க்காதே போன்ற பதாகைகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தாங்கியிருந்தனர்.



## சுமைதாங்கி மீது எரிபொருள் பவுசர் மோதி விபத்து

நிதர்ஷன் வினோத்

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நுணாவில் ஏ9 பிரதான வீதியில் நுணாவில் 190-ஆம் கட்டைப் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தால் மரவுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்ட சுமைதாங்கி மீது எரிபொருள் பவுசர் மோதி விபத்து இடம் பெற்றுள்ளது.

செவ்வாய்க்கிழமை (11) அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில், தொல்பொருள் திணைக்களத்தினால் மரபுரிமை சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த பாரம்பரிய சுமைதாங்கி முற்றாக அழிவடைந்துள்ளது.

இவ்விடத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்ட சுமைதாங்கி, இளைப்பாறும் மடம், குடிநீர்க்கிணறு என்பன காணப்படுகின்றன.

இவ் விபத்தினால் நொறுங்கிய சுமைதாங்கியின் கற்களை நுணாவிலில் வசிக்கின்ற தனிநபர் ஒருவர் உழவு இயந்திரத்தின் மூலம் முற்றாக அள்ளிச் சென்றுள்ளார். விபத்தை ஏற்படுத்திய வாகனம் அப்பகுதியில் இருந்து பொலிஸாரால் கொண்டு செல்வதற்கு முன்னரேயே விபத்தினால் இடிந்த சுமைதாங்கி கற்களை சுமைதாங்கி ஒன்று அவ்விடத்தில் இருந்ததற்கான அடையாளமே தெரியாமால் பொலிஸார் முன்னிலையிலேயே அகற்றியமை அப்பகுதி மக்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இடிந்த கற்களை பொதுமக்கள் பொலிஸார் பார்த்துக்கொண்டு இருக்கையிலேயே குறித்த நபர் அள்ளிச் சென்றுள்ளார். இது தொடர்பாக அப்பகுதி மக்கள் சாவகச்சேரி நகரசபைக்கு உடனடியாக அறிவித்தும் குறித்த இடத்திற்கு சம்பந்தப்பட்ட எவரும் வருகை தரவில்லை.

இந்நிலையில் அப்பகுதி இளைஞர்கள் முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர் மூலமாக தொல்பொருள் திணைக்களத்துக்கு அறிவித்ததை அடுத்து தொல்பொருள் திணைக்களத்தினர் உடனடியாக அப்பகுதிக்கு விரைந்தனர்.



## சமூர்த்தி அபிவிருத்தி சந்தைகள்

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலகங்களில் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் விற்பனை சந்தைகள் திங்கட்கிழமை (10) ஆரம்பித்து வைக்கப்பட்டன.

துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில் பிரதேச செயலகங்களில் சமூர்த்தி பயனாளிகளின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்கிலான சந்தைகளே ஆரம்பித்துவைக்கப்பட்டன.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும், பிரதேச செயலகமும் இணைந்து நடாத்தும் அபிமானி விற்பனை சந்தையினை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் ஆரம்பித்துவைத்தார். புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் க.விமலநாதன் மற்றும் மாவட்ட சமூர்த்தித்திணைக்கள பணிப்பாளர் மற்றம் பிரதே செயலாளர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் நடாத்தப்பட்ட மாவட்ட அரசாங்க அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான விளையாட்டுப்போட்டியில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டுள்ளது

இதில் கலந்துகொண்ட அனைத்து அரச உத்தியோகத்தர்களையும் ஊக்கப்படுத்தும் நோக்கில் சான்றிதழும், நினைவுச்சின்னமும் மாவட்டஅரசாங்க அதிபரினால் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

## வருடாந்த மஹோற்சவம்

நிதர்ஷன் வினோத்

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழாவின் திருமஞ்ச திருவிழா மிகவும் பக்தி பூரவமாக செவ்வாய்க்கிழமை (11) இடம்பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து வசந்த மண்டப பூஜை இடம்பெற்று விநயாக பெருமான் உள் வீதி எழுந்தருளினார். அதனைத் தொடர்ந்து வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் விநாயக பெருமான் வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.





## புதிய நிர்வாகத் தெரிவு

2023/2024 ம் ஆண்டிற்கான அம்பாறை மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் மற்றும் 2023/2025 ஆண்டிற்கான புதிய நிர்வாக தெரிவும் இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தின் (AASL) தலைவர் பாலித பெர்ணான்டோவின் வேண்டுகோளுக்கு இணங்கவும் அத்துடன் பூரண வழிகாட்டலுடன் இலங்கை மெய்வல்லுனர் சங்க பிரதிநிகளான வீ.மோகனகுமார் மற்றும் திரு. ஏ.ஏ.யு.பி. ரூபஸ்ரீ ஆகியோரின் பங்குபற்றுதலுடன் சாய்ந்தமருது விடுதியில் நடைபெற்றது.



## முதியோர் கொடுப்பனவு வழங்கல்

ரீ.எல்.ஜவ்பர்கான்

ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவில் முதியோர் கொடுப்பனவு காத்திருப்பு பட்டியலில் உள்ள 84 முதியோர்களுக்கு 5,000 கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு 10.04.2023 அன்று ஆரையம்பதி உதவி பிரதேச செயலாளர் லோகினி விவேகானந்தராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், சமுகசேவை உத்தியோகத்தர், CAMID நிறுவன உத்தியோகத்தர் ஆகியோர்களும் கலந்து கொண்டு 5,000 ரூபாய் பெறுமதியான வவுச்சர்களை வழங்கி வைத்தனர்.



## இப்தார் நிகழ்வு

தீஷான் அஹமட்

மூதூர் முஸ்லிம் பெண்கள் வலயமைப்பின் அங்குரார்ப்பணமும், இப்தார் நிகழ்வும் மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்கிழமை இடம்பெற்றது.

மூதூர் முஸ்லிம் பெண்கள் வலயமைப்பு இதனை ஏற்பாடு செய்திருந்தது. இதற்கான அனுசரனையை அகம் மனிதாபிமான வலயமைப்பு வழங்கியிருந்தது.

இதன்போது முஸ்லிம் வலயமைப்பின் பெண்களுக்கு அகம் மனிதாபிமான வலயமைப்பினால் உலருணவுப் பொதிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், அகம் மனிதாபிமான வலயமைப்பின் இணைப்பாளர், திட்ட இணைப்பாளர், மதகுருமார்கள் ,பெண்கள் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



## இப்தார் நிகழ்வு

பாறுக் ஷிஹான்

கல்முனை வலயக்கல்வி அலுவலக வருடாந்த இப்தார் நிகழ்வு கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம். எஸ். சஹதுல் நஜீம் தலைமையில் கல்விப்பணிமனை மண்டபத்தில் நடைபெற்றது.

சமூக நல்லிணக்க இப்தாராக இடம்பெற்ற இந்நிகழ்வில் நோன்பின் மாண்புகளை பற்றி மௌலவி எம்.எச். றியால் (ஹாபீஸி) மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸ், தவராசா கலையரசன் உட்பட அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# வசந்தகால விலைகள் வாய் பிளக்க செய்கின்றன

டி.சந்ரு

நுவரெலியா வசந்த கால வர்த்தக நிலையங்களில் அதி கூடிய விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன என நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா ஏப்ரல் மாத வசந்த காலம் ஆரம்பமாகிய நிலையில் நாட்டில் பல்வேறு பாகங்களிலிருந்து நுவரெலியா மாவட்டத்தினை நோக்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாலும் சித்திரை புத்தாண்டுடில் நீண்ட விடுமுறை காணப்படுவதனாலும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு விடு முறையினை கழிப்பதற்காக வருகை தந்துள்ளனர் . வசந்த காலத்தினை வாய்ப்பாக பயன்படுத்தி நுவரெலியா நகர பகுதிகளில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் பொருட்கள் கட்டுப்பாட்டு விலையை மீறி அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா நகர பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில்

அரசாங்கத்தால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சலுகை விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதில்லை எனவும் , விலைக்கு மேலதிகமாக பணம் அறவிடப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா கிரகறி வாவி பகுதியிலும் , பிரதான நகரிலும் இயங்கி வருகின்ற சில்லறை மற்றும் வசந்த கால தற்காலிக வர்த்தக நிலையங்களிலும் குறிப்பாக ஹோட்டகளில் உணவு உள்ளிட்ட அனைத்து பொருட்களும் அதிக விலைக்கே விற்பனை செய்து வருவதாகவும் எந்தவித கட்டுப்பாட்டு விலைக்கும் பொருட்கள் விற்கப்படுவதில்லை குறிப்பிட்டுள்ளனர்.




## 20 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

எதிர்வரும் பண்டிகை காலத் தையொட்டி, நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான நகரங்களில் அதிகூடிய விலைக்கு முட்டைகளை விற்பனைச் செய்த குற்றச்சாட்டின் கீழ் 20 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நுகர்வோர் சேவை அதிகாரியின் நுவரெலியா மாவட்ட காரியாலய பொறுப்பதிகாரி அமில ரத்னாயக்க தெரிவித்தார்.

அவர்களை, நுவரெலியா மற்றும் ஹட்டன் நீதவான் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்திய போது, குற்றங்களை ஒப்புக்கொண்டமையால் அவர்களிடமிருந்து 5 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், முட்டைகளை பதுக்கி வைத்திருந்த வர்த்தகர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 2,000 முட்டைகள் நீதிமன்றத்தின் ஊடாக அரசுடமையாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எதிர்ப்பு சட்ட மூலம் எதிராகவே மாறும்

எஸ். கே. குமார்



புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டால் இந்த நாட்டில் வாழும் மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டுவிடும் மக்களுக்கு எதிராகவே மாறும் என்று ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் நுவரெலியா மாவட்ட தமிழ் பிரதிநிதி குழுத் தலைவரும் நுவரெலியா தொகுதி அமைப்பாளருமான கலாநிதி சதானந்தன் திருமுருகன் தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமல்லாமல் ஊடக நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், மற்றும் சுயாதீன அமைப்புக்கள் அரசாங்கத்துக்கு எதிராக குரல் கொடுக்கும் அனைவரையும் கைது செய்யப்படுவார்கள். அவர்களை பயங்கரவாதிகளாக்கப்படுவார்கள் என்றார்.

நுவரெலியாவில், திங்கட்கிழமை (10) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது மேலும் கருத்து தெரிவிக்கையில், இந்த நாட்டில் கடந்த 1979 ஆம் ஆண்டு யுத்தம் நடைபெற்ற பொழுது இயற்றப்பட்ட பயங்கரவாத தடுப்பு சட்டத்தை விட இந்த புதிய பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டம் மிகவும் மோசமானதாக இருக்கும் என்றார்.

இந்த நாட்டில் உள்ளூர் யுத்தம் நடைபெற்ற பொழுது இயற்றப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டத்தினால் மக்கள் எவரும் எங்கும் சுதந்திரமாக செல்ல முடியாமல் இருந்தனர். அதேவேளை தேசிய அடையாள அட்டை இல்லாத பல மலையக பெருந்தோட்ட இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டாரகள். மலையக பெருந்தோட்ட இளைஞர் யுவதிகள் வெளி மாவட்டங்களில் தொழில் செய்ய போக முடியாமல் வீட்டிலே அடைப்பட்டு அவஸ்தைப் பட்டார்கள்.

அன்று செயலில் இருந்த பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டத்தைவிட புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மிகவும் கடுமையாக இருக்கும். இந்த நாட்டில் உள்ளூர் யுத்தம் நடைபெற்று நிறைவடைந்த பின்னர் அந்த சட்டம் பாரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை . ஆனால் இந்த புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் மக்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்படும் என்றார்.

## உதவிக்கரம் நீட்டியுள்ளன



தேசிய மற்றும் சர்வதேச ஸ்தாபனங்களின் உதவியோடு மலையக மக்களின் நிலைப் பேண்தகு அபிவிருத்தி திட்டங்கள் பல அமுல்படுத்தப்படவுள்ளதாக பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளருமான ஜீவன் தொண்டமானின் எண்ணகருவுக்கு அமையவே இவை முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

மலையகத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்துக்கும், சர்வதேச நிறுவனமான வேர்ல்ட் விஷன் நிறுவனத்துக்கும் இடையே அண்மையில் கைச்சாத்திப்பட்டது.

இந்நிகழ்வில் நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, சர்வதேச நிறுவனமான வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கலாநிதி தனம் சேனாதிராஜா மற்றும் இரு நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாடு எதிர்நோக்கி உள்ள பொருளாதார சிக்கல்களில் இருந்து மீண்டெழ பல நாட்டு தூதரகங்களும் சர்வதேச ஸ்தாபனங்களும் உதவிக் கரங்களை நீட்டி வருகின்றன.

அந்த வகையில் எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக மலையகம் எங்கும் தனது சேவைகளை தொடர சர்வதேச நிறுவனமான வேர்ல்ட் விஷன் நிறுவனம் கைகோர்த்துள்ளது.

உணவுத் தட்டுப்பாடு, சுத்தமான குடிநீர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றை மையப்படுத்தி பல வேலை திட்டங்களை நிதியத்தின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளன என்றார்.

**“ பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக மலையகம் எங்கும் தனது சேவைகளை தொடர சர்வதேச நிறுவனமான வேர்ல்ட் விஷன் நிறுவனம் கைகோர்த்துள்ளது உணவுத் தட்டுப்பாடு, சுத்தமான குடிநீர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றை மையப்படுத்தி பல வேலை திட்டங்களை நிதியத்தின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளன என்றார்.**




## டிக்கோயாவில் இப்தார் நிகழ்வு

செ.தி.பெருமாள்

நுவரெலியா மாவட்ட சர்வமத குழு, டிக்கோயா இஸ்லாமிய பள்ளியில் இப்தார் நிகழ்வை திங்கட்கிழமை (10) நடத்தினர்.

நிகழ்வில் பௌத்த இஸ்லாமிய இந்து கிறித்தவ மத குருமார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கலந்து கொண்ட மத குருமார்கள் நமது நாட்டில் உள்ள அனைத்து மக்களும் இன வேறுபாடு இல்லாதது ஒரு தாய் மக்களாக வாழ வேண்டும் என கூறியதுடன் இப் தார் என்றால் என்ன என்பதை கலந்து கொண்டவர்களுக்கு எடுத்து கூறினார்கள்.



## மஹா கும்பாபிஷேகம்

எஸ்.சதீஸ்

பொகவந்தலாவை, வெம்பா தோட்டம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோவில் நவக உண்டபகுகூஷ நூதன அஷ்ட பந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபானம் திங்கட்கிழமை (10) வெகு கோலாகலமாக இடம்பெற்றது.

காலை 06.30மணிக்கு மூகூர்த்த கணபதி ஆராதனை.யாகபூஜை.மகா பூர்ணாகுதி.தீபாராதனை. கும்பம் வீதிப்பிரதட்சனம். இடம்பெற்று காலை 09.15மணிக்கு ஸ்தூல லிங்க ஸ்தூபி கும்பாபிஷேகம் புஷ்பாஞ்சலி மூலாலய பிரவேசம் . கும்ப விம்ப சமயோஜனம் என்பன இடம் பெற்று மஹா கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

மங்கள வாத்தியம் முழங்க சிவஸ்ரீ ராம சோமஸ் கந்த சிவாச்சாரியார் தலைமையில் விஷேட பூஜைகள் இடம்பெற்றதோடு பெருந்திரளான பக்த அடியார்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஏழு கிளிகளுடன் இருவர் கைது

என்.ஆராச்சி

தெரணியகலை, மாளிபோட பிரதேசத்தில் பல வகையான ஏழு கிளிகளை வைத்திருந்தார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிவனொளிபாதமலை வனாந்தரத்தில் பிடிக்கப்பட்டு வீட்டில் வைத்து இக்கிளிகள் வளர்க்கப்பட்டு வந்துள்ளன. கிளிகளுடன் சந்தேகநபர் இருவரும் ஞாயிற்றுக்கிழமை (09) கைது செய்யப்பட்டனர். அவர்கள் கிளிகளை விற்பனைச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஒருவர் படுகொலை

என்.ஆராச்சி

புளத்கொஹூபிட்டிய, நெலுவக்கன பிரதேசத்தில், 37 வயதான நபரொருவர் படுகொலைச் செய்யப்பட்டுள்ளார். படுகொலைச் செய்யப்பட்ட நபர், வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுபவர் என்றும் பக்கத்து வீட்டாருக்கும் இவருக்கும் இடையில் காணிப் பிரச்சினை இருந்தது என்றும், இதுதொடர்பில் இவ்விரு தரப்பினருக்கும் இடையில் 10ஆம் திகதி வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை (11) அதிகாலை அவர் சண்டைக்குச் சென்றுள்ளார். அவர் மீது பதில் தாக்குதல் நடத்தப்பட்ட போதே, அந்நபர் இறந்துள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

பதில் தாக்குதல் நடத்திய நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த புளத்கொஹூபிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# பிறக்கும் ‘சோபகிருது’ வருடம் சகலருக்கும் மகிழ்ச்சிகரமானதாக அமையட்டும்

ஒவ்வொருவரும் ஏதோவொன்றை தேடி அலைந்துகொண்டே இருப்பார்கள். நிம்மதியில்லை, சந்தோஷமில்லை, மகிழ்ச்சி இல்லை, என்றெல்லாம் புலம்பிக்கொண்டிருப்பதை கவனித்திருப்போம். ஆனால், மகிழ்ச்சி தங்களுக்குள்ளே இருக்கும் என்பதை அவ்வாறானவர்கள் மறந்தே விடுகின்றனர்.

எனினும், புத்தாண்டு, பெருநாள் என்றால் அனைவரது முகங்களிலும் புத்துணர்ச்சி தென்படும். பிறக்கவிருக்கும் தமிழ்-சிங்கள புத்தாண்டை (சோபகிருது வருடம்) வரவேற்பதற்காக சகலரும் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர். வீடுகளுக்கு வர்ணங்களை பூசி, புத்தாடைகளைக் கொள்வனவு செய்து, பலகாரங்களைத் தயாரித்து வருட பிறப்புக்காகக் காத்திருக்கின்றனர்.

இன்றையதினம் எவ்வளவு சீக்கிரமாக கடந்துசெல்லவேண்டுமோ, அவ்வளவு சீக்கிரமாக கடக்கவேண்டுமென சின்னஞ்சிறார்கள் மனதுக்குள் வேண்டிக்கொள்வர், புத்தாடைகளை அணிந்து, பலகாரங்களை உண்டு மகிழ்ந்து, பட்டாசுகளை கொளுத்தி விளையாடுவதில் அவர்களுக்கு அலாதிப்பிரியம்.

அதுமட்டுமன்றி, என்னதான் கோபமாக இருந்தாலும், ஒரு புன்னகையில், இன்றேல், புத்தாண்டு வாழ்த்துக்களை கூறுவதன் ஊடாக கோபத்தை தூக்கியெறிந்துவிட்டு, பழையப்படி நண்பர்களாகிவிடுவர். . அவையெல்லாம் ஒவ்வொருடைய சுபாவமாகும்.ஒருதரப்பினரின் கொண்டாட்டத்தில் மற்றுமொரு தரப்பினர் பாதிக்கப்படுவர் என்பது இயல்பானது. அந்தவகையில்தான், பட்டாசுகளை கொளுத்தி மகிழும்போது, பறவைகள், விலங்குகள் அவற்றின் மூலம் ஏற்படும் ஒலியினால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. ஓடியொழிந்து கொள்கின்றன. வீடுகளை சுற்றி வட்டமிடும் காகங்கள், குருவிகள், சத்தமில்லாத இடங்களுக்கு பறந்துவிடுகின்றன.

புத்தாண்டு காலத்தில் விபத்துக்களும், பட்டாசு எரிகாயங்களும், குடும்ப வன்முறைகளும் அதிகரித்திருக்கும். அதனால் உயிராபத்துக்களும் ஏற்பட்டிருக்கும். ஆகையால், மிகவும் நிதானத்துடன் நடந்துகொண்டால் தேவையில்லாத உயிரிழப்புகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும். வீதிகளில் வாகனங்கள் குறைவாகக் காணப்படுவதால், பறக்கலாம் என்ற நினைப்பில் வாகனங்களை செலுத்துவதன் ஊடாக விபத்துக்களே ஏற்படும்.

அதுமட்டுமன்றி, மதுபோதையில் வாகனங்களைச் செலுத்த வேண்டாம். இது உங்களுடைய உயிர்களுக்கு மட்டுமன்றி வாகனத்தில் பயணிப்போர், பாதசாரிகள் மற்றும் ஏனைய வாகனங்களில் பயணிப்போருக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும்.ஏதொவொரு நாளில்தான், சகல கெட்ட பழக்கவழக்கங்களையும் கைவிட்டுவிடவேண்டுமென பலரும் சபதமெடுப்பர். எனினும், அந்த சபதத்தை மறந்து மறுநாளில் இருந்தே கெட்ட பழக்கங்களை ஆரம்பித்துவிடுவர். நல்ல பழக்கங்களை ஆரம்பிப்பது என்பது இயலாத காரியமாகவே பலருக்கும் அமைந்து இருக்கும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் புத்தாண்டை நினைவுகூர்ந்து மரக்கன்றுகள் நாட்டப்படவுள்ளன. அதில் சகலரும் பங்கேற்றால் பசுமையை தேடியலைய வேண்டிய தேவை யாருக்கும் ஏற்படாது. காடுகளை அழிக்கும் மனிதர்களால் இயற்கையின் சமநிலை குழம்பியுள்ளது.

ஆகையால், நல்லவற்றை சிந்தித்து செயற்படுவோமென அனைவரும் உறுதிபூண்டு அதன்பிரகாரம் செயற்பட்டால், யாருக்கும் பிரச்சினை இல்லை. புத்தாண்டும் மகிழ்ச்சிகரமானதாக அமையும் எனக் கூறி, நாமும் வாழ்த்துக்களை பகிர்ந்துகொள்வதில் பெருமிதம் அடைகின்றோம்.




# தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# நெருக்கடியில் எதிர்க்கட்சிகள்



எம்.எஸ்.எம். ஐயூப்

நாட்டின் அரசியல் நிலைமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சாதகமாக சற்று திரும்பி வருவதாக தெரிகிறது. அதற்குக் காரணம் அவரது திறமை என்றும் கூறலாம். அதேவேளை அவரது சர்வாதிகார போக்கின் விளைவு என்றும் கூறலாம்.

இதற்கு முன்னர் ஒரு கட்டுரையில் நாம் கூறியதைப் போல் கடந்த மாதம் வெளியிடப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பின் படி மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கே நாட்டில் மிகவும் கூடுதலான மக்கள் ஆதரவு இருந்தது. அது 43 சதவீதமாகும். சஜித் பிரேமதாசவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி பிரதான எதிர்க்கட்சியாக இருந்த போதிலும் 30 சதவீத மக்கள் ஆதரவையே பெற்றிருந்தது. ஜனாதிபதியின் ஐக்கிய தேசிய கட்சியும் மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி 4 சதவீத ஆதரவை பெற்றிருந்தது.

அந்த நிலையில் சட்டப்படி நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கடந்த மாதமோ அல்லது இம்மாதமோ நடைபெற்று இருந்தால் மக்கள் விடுதலை முன்னணி பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை கைப்பற்றி இருக்கக்கூடும்;. அவ்வாறு நடந்திருந்தால் அது அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலினதும் 2025 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலினதும் முடிவுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதை தடுக்க முடியாது.

எனவேதான் ஆளும் கட்சியான பொதுஜன முன்னணியும் ஐ.தே.க.வும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை இந்த சந்தர்ப்பத்தில் நடத்துவதை கடுமையாக எதிர்க்கின்றன. ஆனால் தற்போது நாட்டின் பொருளாதார நிலையும் அதன் காரணமாக அரசியல் நிலைமையும் சிறிது சிறிதாக மாறி வருவதையும் அவதானிக்க முடிகிறது. இந்த நிலைமை ஏற்படுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியே காரணமாகியது.

எனினும் கூர்ந்து பார்த்தால் பொருளாதார நெருக்கடி இன்னமும் தீரவில்லை. ஒரு தற்காலிக நிவாரன நிலையே உருவாகியுள்ளது. இறக்குமதி தடைகளாலும் வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்தாததாலும் நாட்டிலிருந்து அந்நிய செலாவணி வெளியேற்றம் வெகுவாக குறைந்துள்ளது. அதேவேளை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களாலும் உல்லாசப் பிரயாணத்துறையாலும் வரும் வருமானம் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் சற்று அதிகரித்துள்ளது. மார்ச் மாதம் 22 ஆம் திகதி நாணய நிதியத்திடம் இருந்தும் 330 மில்லியன் டொலர் கிடைத்தது. இவற்றின் காரணமாக தற்போது மத்திய வங்கியின் கையிருப்பில் கடந்த வருடத்தைப் பார்க்கிலும் கூடுதலாக அந்நிய ntலாவணி இருக்கிறது.

அதன் மூலம் அரசாங்கம் எண்ணெயக் கொள்வனவை சமாளித்து வருகிறது. இப்போது பணம் கிடைக்கும் வரை எண்ணெய்க் கப்பல்கள் துறைமுகத்துக்கு வெளியே காத்திருப்பதாக செய்திகள் வருவதில்லை. எண்ணெய் விலையை குறைக்க அதனால் அரசாங்கத்தால் முடிந்தது. உலகச் சந்தையில் எண்ணெய் விலை குறைந்திருந்தமையும் இதற்குக் காரணமாகும். எண்ணெய் விலை ஏறத்தாழ ஏனைய சகல பொருட்களினதும் விலையை பாதிக்கிறது. ஆயினும் இம்முறை எண்ணெய் விலை குறைப்பால் பஸ் கட்டனம் சற்று குறைந்ததைத் தவிர பொதுமக்கள் அடைந்த நன்மை எதுவும் பெரிதாக இல்லை என்றே கூற வேண்டும். கடைகளில் சாப்பாட்டுப் பொதிகளின் விலை சற்று குறைந்தாலும் வீடுகளில் உணவுக்கான செலவு குறையவில்லை.

எனினும், இந்த விலை குறைப்புக்கள் பற்றிய செய்திகள் பல நாட்களாக ஊடகங்களால் தொடரந்து வெளியிட்டதன் காரணமாக பொருளாதார நெருக்கடி தீர்ந்துவிட்டது என்பதைப் போன்ற ஓர் உணர்வு பரவியிருக்கிறது. அது உண்மையல்ல என்றாலும் நாடு தீர்வுப் பாதையில் காலடி எடுத்து வைத்துள்ளது என்பது உண்மையே. நாணய நிதியத்தின் உதவியை சரியாக பயன்படுத்திக் கொண்டு அந்நிய செலாவணிப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை கண்டால் மட்டுமே நெருக்கடி தீர்ந்தது என்று மகிழ்ச்சியடையலாம். அதற்கு அரசாங்கம் மேலும் பல முக்கிய கட்டங்களை தாண்டிச் செல்ல வேண்டும்.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு அதில் முக்கிய காரணியொன்றாகும். அது எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்பது பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். உள்நாட்டுக் கடன்களையும் மறுசீரமைக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் கூறப்படுகிறது. அதாவது அரசாங்கம் ஊழியர் சேமலாப நிதியத்திடம் பெற்றிருக்கும் கடனிலும் ஒரு பகுதியை திருப்பிச் செலுத்தாது. அது இலட்சக் கணக்கான ஊழியர்களை பாதிக்கும். உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் கொந்தளிப்புக்களை உருவாக்கலாம்.

அதேவேளை, இறக்குமதி கட்டுப்பாடு போன்ற காரணங்களால் நாட்டின் கைத்தொழில்கள் பாதித்துள்ளன. இதன் காரணமாக இலங்கையில் பிரதான ஆடைத் தொழிற்சாலைகள் நாட்டை விட்டு வெளியேற தயாராகி வருவதாக செய்திகள் கூறுகின்றன. இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தினால் அந்நிய செலாவணிப் பிரச்சினை மீண்டும் மோசமாகும் என்ற அபாயமும் இருக்கிறது. அது சிறிது சிறிதாக செய்ய வேண்டியதொன்றாகும்.

நாணய நிதியம் உருவாக்கித் தரும் சந்தர்ப்பங்களை பயன்படுத்தி இது போன்ற பிரச்சனைகளை சமாளித்து வெளிநாட்டுக் கடன்களையும் செலுத்திக் கொண்டு கடன் பெறாத நிலைக்கு நாட்டின் பண்டங்களினதும் சேவைகளினதும் உற்பத்திகளை பெருக்கினால் மட்டுமே நெருக்கடி தீரும். அதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. அவ்வாறானதோர் உற்பத்தித் திட்டமொன்று அரசாங்கத்திடம் இருப்பதாகவும் தெரியவில்லை.

தற்போபதைக்கு பொருளாதார நிலையில் ஏற்பட்டு இருக்கும் சாதகமான நிலையோடு ஜனாதிபதி மிக சாதுரியமாக அரசியல் எதிர்ப்புக்களையும் சமாளித்து வருகிறார். இரண்டு பேர் ஒரு பதாகையை பிடித்துக் கொண்டு வீதியில் இறங்கினாலும் ஒரு பொலிஸ் படையே அவர்களை சூழ்ந்து அவர்களை பிடித்து உள்ளே தள்ளும் விதமான ஓர் அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. வரி அதிகரிப்புக்கு எதிராக தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த போராட்டம் மிரட்டல் காரணமாக பிசுபிசுத்துப் போய்விட்டது. பெற்றோலியக் கூட்டுத்தாபன தெழிற்சங்கங்களின் போராட்டமும் கடும் நடவடிக்கைகளால் அடக்கப்பட்டது.

அதேவேளை, தற்போது பிரச்சினை தீர்ந்தது என்றும் ஜனாதிபதியின் திறமையே இதற்குக் காரணம் என்றும் பரவி வரும் அபிப்பிராயத்தின் காரணமாக நாட்டில் அரசியல் கட்சிகளும் அவற்றுக்கிடையிலும் சில நெருக்கடி நிலைமைகள் உருவாகி வருவதையும் அவதானிக்கூடியதாக இருக்கிறது. தமக்கு வீசிய மக்கள் அலை குறைந்து விடும் என்று கருதும் மக்கள் விடுதலை முன்னணி இப்போது நாணய நிதியத்தின் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

நாணய நிதியமே நாட்டை காப்பாற்றியது என்றதோர் எண்ணம் மக்கள் மத்தியில் உருவாகியிருக்கும் நிலையில் இந்தத் தாக்குதல்கள் மக்கள் விடுதலை முன்னணிக்கு பாதகமாக அமையலாம். அதேவேளை உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடைமுறையில் காலவரைறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் தமது பலத்தைக் காட்டி மக்களை தம்மோடு வைத்திருக்கும் வாய்ப்பையும் அக்கட்சி இழந்துள்ளது.

கொள்கை ரீதியாக நாணய நிதியத்துடனான திட்டத்தை வெகுவாக ஆதரிக்கும் சிலர் ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கின்றனர். ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன மற்றம் கபீர் ஹாஷிம் போன்றவர்கள் தமது திட்டங்களையே ஜனாதிபதி அமுலாக்கி வருகிறார் என்று உரிமை கோருகின்றனர். அதில் உண்மையில்லாமல் இல்லை. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக நாணய நிதியத்தின் உதவியை நாடவேண்டும் என்று 2021 ஆம் ஆண்டிலேயே அவர்கள் கூறினர். ஆனால் அப்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதனை ஏற்கவில்லை. பின்னர் கடந்த வருடம் மார்ச் மாதம் தான் கோட்டாபய அதனை ஏற்று நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை அரம்பித்தார். இப்போது ஹர்ஷ போன்றவர்கள் ஜனாதிபதி ரணிலை பாராட்டும் போது அது சஜித் பிரேமதாச உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்களுக்கு சங்கடமான நிலைமையை உருவாக்குகிறது.

அதேவேளை இவர்கள் ரணிலின் தலைமையிலான அரசாங்கத்தில் இணையலாம் என்றதோர் சந்தேகமும் வலுவடைந்து வருகிறது. பல கட்சிகளுக்குத் தாவி பழக்கப்பட்டவரான ராஜித்த சேனாரத்ன ஏற்கெனவே அரசாங்கத்தில் இணைய விருப்பம் தெரிவித்துள்ளார். இவர்களுக்கு ரணில் புதியவரல்ல. அவர் 2019 ஆம் ஆண்டு இறுதி வரை அவர்களது தலைவராக இருந்தவர். எனவே கட்சித்தாவல்கள் அல்லது கட்சிப் பிளவுகள் பற்றி ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்களிடையே எற்பட்டுள்ள அச்சம் நியாயமானதாகும்.

இதேபோன்றதொரு நிலைமை பொதுஜன முன்னணிக்குள்ளும் உருவாகியுள்ளது. எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர போன்ற சிலர் ஜனாதிபதியின் நடவடிக்கைகளை பாராட்டி வருகின்றனர். ஐதேகவும் பொதுஜன முன்னணியும் கூட்டாக ரணிலை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த வேண்டும் என்றதொரு கருத்தும் நிலவி வருகிறது. அதனை முழுமையாக ஏற்க அக்கட்சியின் வேறு சிலர் மறுக்கின்றனர். கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கட்சியைச் சேர்ந்த ஒருவரே வர வேண்டும் என்பதே அவர்களது வாதமாகும்.

ஜனாதிபதித் தேர்தலின் போது இணைந்து செயற்பட்டாலும் பொதுத் தேர்தலின் போது இணைந்து செயற்படுவது இரு கட்சிகளுக்கும் இலகுவான விடயமல்ல. ஏனெனில் ஏற்கெனவே இரண்டு கட்சிகளிலும் தொகுதி அமைப்பாளர்கள் இருக்கின்றனர். இரண்டு கட்சிகளும் இணைந்தால் அமைப்பாளர் பதவிக்கு சகல தொகுதிகளிலும் இரண்டு கட்சிகளுக்கும் இடையே சண்டை ஏற்படும். சுருக்கமாக கூறுவதாயின் பொதுஜன முன்னணியின் சிலர் ஜனாதிபதியோடு தொடர்நது இணைந்து செயற்பட விரும்புகிறார்கள். வேறு சிலர் ஆபத்தின் போது ரணிலை பாவித்துவிட்டு கறிவேப்பிலையைப் போல் பின்னர் தூக்கியெறியவே நினைக்கின்றனர். எல்லாம் நாணய நிதியத்தின் திட்டத்தின் வெறியிலேயே தங்கியிருக்கிறது.



## வாழ்வியல் தரிசனம்

அனுகூலமான நல்ல அதிர்ஷ்டங்கள், வரவுகள் தேடி வரும்போது, அதைக் கண்டுகொள்ளாமலும் துன்பங்கள் சூழும்போது, எப்படிப் போராடி வெல்வது என்று தெரியாமல் திணறுபவர்களின் நிலை மிகவும் கொடியது.

கடமைகளைக் கண்டுகொள்ளாமல், சோம்பேறித்தனமாக வாழ்வதுகூட பெரும் குற்றம். மேலும், வாழ்க்கையில் போராடுவது பல நல்ல, அரிய அனுபவங்களைப் பெற்றுத்தரும். கற்றுக்கொள்வது கல்வி மட்டுமல்ல; நல்ல அனுபவங்களையும் தான்! முயற்சிகளின்போது, முரணான அனுபவங்கள் எல்லாமே, வாழ்க்கையின் வடிவங்கள். இத்தகைய அனுபவங்கள், கல்விக்கும் மேலானவை. சொல்லப்போனால் இவைகள் கூட, கல்வியின் அத்தியாயங்கள்.

எத்தகைய அனுபவங்களையும் ஏற்றுக்கொள்பவர்கள், தங்கள் நிலைகளை உயர்த்திக் கொள்கின்றார்கள். செல்வத்துடன் வாழ்ந்து அனுபவிப்பவர்களைவிட, ஏழ்மையாக இருந்துபோராடி வெல்பவர்களே சாதனையாளர்கள்.

இன்று உலக மாற்றத்தில், குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் உரியதாக முன்னேற்றம் இருக்கவில்லை. யாவரும் உயர்ந்திட முடியும். முயற்சியுடன் கூடிய கடின உழைப்பில் தோல்வி கிடையாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாழடைந்த கட்டடத்தால் பேராபத்து

தோப்பூர் கமநலசேவை நிலையத்துக்கு உட்பட்ட நெற்களஞ்சியசாலை சேதமடைந்து, நீண்ட காலமாகக் கவனிப்பாறின்றி காணப்படுவதோடு, அதன் சுற்றுப்புறமும் பற்றைக்காடாகி, அபாயகரமான நிலையில் உள்ளதாக, பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த நெற்களஞ்சியசாலைக் கட்டடம், யுத்த காலத்தில் சேதமாக்கப்பட்ட நிலையில், இன்னும் புனரமைக்கப்படாது, மக்களுக்குப் பெரிதும் பயன்படும் தேவையுள்ள அரசாங்கத்தின் பெரும்வளம், இவ்வாறு பயனின்றி வீணாக்கப்படுவதாகவும் தேவையுள்ள பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இப்பாழடைந்த கட்டடத்துக்கு அருகில், சல்மா வித்தியாலயம் அமையப் பெற்றுள்ளதால், இங்கு கல்வி கற்கின்ற மாணவிகளும் ஆசிரியர்களும் அச்சத்துடனேயே பாடசாலை செல்வதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மையில், இக்கடடத்தின் ஒருபகுதி சுவர் இடிந்து விழுந்துள்ளதால், இப்பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் மயிரிழையில் உயிர்தப்பிய நிலையில், மிகுந்த அச்சத்துடன் தினமும் பாடசாலை செல்வதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, இக்கட்டடம் தொடர்பாக, பொறுப்புவாய்ந்த உரிய அதிகாரிகள், உரிய நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை நிருவாகமும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.




# ரம்மி விளையாடினால் 3 மாதம் சிறை

இந்தியாவில் அண்மைக் காலமாக ஒன்லைன் சூதாட்டத்தினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக தமிழகத்தில் மாத்திரம் இதுவரை 45 க்கும் மேற்பட்டவர்கள் இதனால் தமது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் ஒன்லைன் சூதாட்டத்தினால் ஏற்படும் உயிரிழப்பை தடுக்கும் வகையில் தமிழக அரசு கடந்த 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி ஒன்லைன் சூதாட்ட தடைச்சட்ட மசோதாவை அறிமுகப்படுத்தியது.

எனினும் இம்மசோதாவை இயற்ற, தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை எனக் கூறி தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிக்க மறுத்தார்.



இதற்கு தமிழக அரசு உட்பட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் கடும் கண்டனத்தை தெரிவித்திருந்தனர். இதைத்தொடர்ந்து, ஒன்லைன் சூதாட்ட தடைசட்ட மசோதாவை மீண்டும் சட்டசபையில் நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்ப தமிழக அமைச்சரவை முடிவு செய்தது.

இந்நிலையில், இரண்டாவது முறையாக சட்டமன்றத்தில் நிறைவேற்றிய ஒன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதாவுக்கு ஆளுநர் ஆர்.என். ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

அவரின் ஒப்புதலைத் தொடர்ந்து ஒன்லைன் சூதாட்டம் தடைச்சட்டம் விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஒன்லைனில் ரம்மி விளையாடுபவர்களுக்கு எதிராக 3 மாதங்கள் சிறை தண்டனை விதிக்க சட்டத்தில் வழிவகை செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுமியின் உயிரைப் பறித்த தொலைபேசி

மும்பை

பெற்றோர் தொலைபேசியைப் பயன்படுத்தத் தடை விதித்ததால் 15 வயதான சிறுமியொருவர் தனது உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் மும்பையில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மும்பையின் மல்வானி பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. 9 ஆம் தரத்தில் கல்வி கற்கும் குறித்த சிறுமி அதிகளவான நேரத்தை தனது தொலைபேசியிலேயே செலவிட்டுவந்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த சிறுமியின் பெற்றோர் அவரைக் கண்டித்துள்ளதுடன் அவரது தொலைபேசியையும் பறித்துக்கொண்டனர்.

இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான சிறுமி கடந்த சனிக்கிழமை தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



## கடல் கடந்த காதல் கரம் கோர்த்தது

கடலூர்

கடலூர் ,வேணுகோபாலபுரத்தை சேர்ந்தவர் பாலசந்தர். இவர் நியூசிலாந்தில் தொழில்முனைவராக பணிபுரிந்து வருகின்றார்.

இவருக்கும் சீனாவைச் சேர்ந்த யீஜியோவுக்கும் சமூக வலைதளம் மூலம் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

இப்பழக்கம் நாளடைவில் காதலாக மலர்ந்துள்ளது. இதையடுத்து இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர். இதற்கு இரு வீட்டாரின் பெற்றோரும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து இருவரும் நேற்று முன்தினம் கடலூரில் உள்ள திருமண மண்டபமொன்றில் தமிழ் முறைப்படித் திருமணம் செய்து கொண்டனர்.

தேசம் கடந்து மலர்ந்த காதல், திருமணத்தில் முடிந்துள்ளதைப் பார்த்து, இணைய வாசிகள் பலரும் தமது வாழ்த்துக்களை குறித்த காதல் ஜோடிக்குத் தெரிவித்து வருகின்றனர்.



## ஒரே வாரத்தில் 72 பேர் உயிரிழப்பு

பிலிப்பைன்ஸ்

பிலிப்பைன்ஸில், ஈஸ்டர் பண்டிகை கொண்டாட்ட வாரத்தில், இதுவரை இல்லாத வகையில் 72 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்ததாக, அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

கொரோனாவை முன்னிட்டு 2 ஆண்டுகளாக விதிக்கப்பட்டிருந்த பயணக்கட்டுப்பாடுகள் முற்றிலுமாகத் தளர்த்தப்பட்டதால் கடற்கரைகளும், ரிசோர்ட்டுகளும் மக்களால் நிரம்பி வழிந்தன.

இந்நிலையில் பெற்றோரின் துணையின்றி கடலில் தனியாகக் குளித்த சிறுவர்கள், மதுபோதையில் கடலில் குளித்தவர்கள் என ஒரே வாரத்தில் 72 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.





## பாலியில் கரையொதுங்கிய இராட்சத திமிங்கலம்

பாலி

பாலியில் ஜெம்ப்ரானா மாவட்டத்தில் உள்ள ‘யே லே‘ கடற்கரையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை சுமார் 56 அடி நீளம் கொண்ட இராட்சத திமிங்கலமொன்று இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

கடந்த ஒரு வார காலத்தில் மாத்திரம் இடம்பெற்ற 3 ஆவது சம்பவம் இது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திமிங்கலத்தின் இறப்புக்கான காரணம் இன்னும் அறியப்படாத நிலையில், உள்ளூர் கடல் மற்றும் மீன்வளத்துறை அதிகாரி ஒருவர்"சில நாட்களுக்கு முன்பு கரை ஒதுங்கிய திமிங்கிலம் போல" இந்த திமிங்கிலமும் நோயால் இறந்திருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## 60 வயதிலும் இளமை,90 வயதிலும் தாய்மை


பாகிஸ்தான்

பாகிஸ்தானின் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக ‘ஹன்சா‘ பள்ளத்தாக்கு கருதப்படுகின்றது.

இப்பள்ளத்தாக்கில் ‘ஹன்ஜா’ சமூகத்தினர் வாழ்கின்றனர்.இவர்கள் மக்களை விட மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் மிகவும் வலிமையானவர்கள் எனக் கூறப்படுகின்றது.

அதுமட்டுமல்லாது இம்மக்கள் 150 ஆண்டுகள் வரை வாழ்கின்றனர் எனவும் பெண்கள் 90 வயதிலும் தாயாக முடியும் எனவும் குறிப்பாக இம்மக்கள் 80 வயது வரை இளமையாகக் காட்சியளிக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவர்கள் மருத்துவமனைக்குச் செல்வதில்லை எனவும் இங்குள்ள மக்களின் சராசரி ஆயுட்காலம் 120 ஆண்டுகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது இச் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் மிகவும் அழகாக இருப்பதற்குக் காரணம், அவர்கள் இமயமலைப் பனிப்பாறையிலிருந்து உருகிய தண்ணீரைக் குடித்து, அதில் குளிப்பதுதான் எனக் கூறப்படுகின்றது.



# ஐ.பி.எல்: பெங்களூரை வென்ற லக்னோ

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி. எல்), பெங்களூருவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற றோயல் சலஞ்சர்ஸுடனான போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ்

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்: 212/2 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பப் டு பிளெஸி ஆ.இ 79 (46), விராட் கோலி 61 (44), கிளென் மக்ஸ்வெல் 59 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் வூட் 1/32 [4])

லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ்: 213/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 65 (30), நிக்கலஸ் பூரான் 62 (19), ஆயூஷ் படோனி 30 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 3/22 [4], டேவிட் வில்லி 0/32 [4])

போட்டியின் நாயகன்: நிக்கலஸ் பூரான்

இந்நிலையில், சென்னையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸை சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.





## டொட்மண்டிலேயே தொடரவுள்ள றொய்ஸ்?

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பொரூசியா டொட்டமுண்டின் அணித்தலைவரான மார்கோ றொய்ஸ், அக்கழகத்துடன் புதிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கடந்த 2012ஆம் ஆண்டிலிருந்து டொட்டமுண்டிலிருக்கும் 33 வயதான றொய்ஸ், டொட்டமுண்டில் தொடருவதற்காக ஊதியக் குறைப்பை எதிர்கொள்வார் எனக் கூறப்படுகிறது.



## பீலிக்ஸை தக்க வைக்கும் நம்பிக்கையில் செல்சி?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முன்களவீரரான ஜோவா பீலிக்ஸை அடுத்த பருவகாலத்திலும் தக்க வைக்க செல்சி எதிர்பார்த்துள்ளது.

ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டிலிருந்து இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் கடனடிப்படையில் பீலிக்ஸை செல்சி கைச்சாத்திட்டிருந்தது.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## சமநிலையில் பார்சிலோனா ஜிரோனா போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஜிரோனாவுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா சமப்படுத்தியது.

அந்தவகையில் லா லிகா புள்ளிகள் பட்டியலில் 72 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பார்சிலோனா காணப்படுகின்றது. நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் 59 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், 57 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும், 51 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் றியல் சொஸைடட்டும் காணப்படுகின்றன.



சித்திரைப் புத்தாண்டுக் கிண்ணக் கிரிக்கெட் தொடர்:

## சம்பியனான வி.ஆர்.கே ஸ்டாலியன்ஸ்

வீ.ரி. சகாதேவராஜா

மலரவிருக்கும் தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டை கிரிக்கெட்டுடன் வரவேற்பதற்காகவும், கல்முனைப் பிராந்திய இளைஞர்களுக்கிடையிலான நட்புப்பாலத்தை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடனும், கல்முனையில் நடாத்தப்பட்டு வந்த புத்தாண்டுக் கிண்ண மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் வி.ஆர்.கே ஸ்டாலியன்ஸ் சம்பியனானது.




கல்முனை உவெஸ்லி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற ஷெஷான் லெவிண் லியோபார்ட்ஸை வென்றே ஸ்டாலியன்ஸ் சம்பியனாகியிருந்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்டாலியன்ஸ், முதலில் களத்தடுப்பிலீடுபடத் தீர்மானித்தது.

அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய லியோபார்ட்ஸ், ஒன்பது ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 47 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்டாலியன்ஸ், 6.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

சம்பியனான ஸ்டாலியன்ஸுக்கு 50,000 ரூபாய் பணப்பரிசும், வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது. இரண்டாமிடம் பெற்ற லியோபார்ட்ஸுக்கு 30,000 ரூபாய் பணப் பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது.

கல்முனையின் பாரம்பரியம் மிக்க பழைய தனியார் கழகங்களுடன் சில புதிய கழகங்களும் சேர்ந்து தினேஷ் லெவிண் டொமினேட்டர்ஸ், கிமா பைட்டர்ஸ், கிர்த்திக் ஹைஸ்னு ப்ரோஸ், றிச் லெவிண் டைகர்ஸ், வெற்றி விநாயகர் என மொத்தமாக ஏழு அணிகள் பங்குபற்றின.

இதில் முதலாவது தகுதிகாண் போட்டியில் றிச் 11 டைகர்ஸை வென்று ஸ்டாலியன்ஸ் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்த நிலையில், வெளியேற்றப் போட்டியில் பைட்டர்ஸையும், இரண்டாவது தகுதிகாண் போட்டியில் டைகர்ஸையும் வென்று இறுதிப் போட்டிக்கு லியோபார்ட்ஸ் தகுதி பெற்றிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 12 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.